# ‘ஏழாவது ஊழி’ ஐங்கரநேசனின் புதிய புத்தகம்



ஈழத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமான திரு. பொ. ஐங்கரநேசன் அவர்கள் சுற்றுச் சூழல் குறித்துப் பல ஆய்வுகளை மேற் கொண்டு வருகிறார்.

யாழ்ப்பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் முது அறிவியல் பட்டம் பெற்ற இவர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் இதழியல் மற்றும் வெகுசனத் தொர்பாடலில் முதுநிலைப் பட்டயப் படிப்புப் பயின்றவர்.

இவர் சமீபத்தில எழுதிய ‘ஏழாவது ஊழி’ என்னும் சுற்றுச் சூழல் பற்றிய நூல் ஆகஸ்ட் 15ம் திகதி மாலை 5 மணிக்கு Ascension Hall, The avenue, Wembley, Middlesex, HA9 9Ql என்னும் இடத்தில் வெளியிடப்பட உள்ளது.

திரு ஐங்கரநேசன் ***ஒரு பேப்பர்*** ருக்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள் உங்களுக்காக

*ஆ—ர்*

*உங்களுக்குச் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்த அக்கறை எவ்வாறு ஏற்பட்டது?*

சூழலியல் வெறுமனே கல்வி அல்ல, அது வாழ்க்கை. இரத்தமும் சதையும் என்பார்களே, அதுபோல இயற்கையில் தோய்ந்து அதன் ஒரு அங்கமாகவே அனுபவித்து வாழுகின்ற வாழ்க்கைதான் சூழலியல். சூழலியல் குறித்து இவ்வாறுதான் என்னால் புரிந்து கொள்ள முடி கிறது. இதனால் அபிவிருத்தியின் பெயரால் காடுகள் அழிக்கப்படும் போது எனக்கு வலிக் கிறது. காற்றில் குவியும் கரிப்புகை எனக்குச் சுடுகிறது. உயிர்ப் பல்வகைமையில் அழியும் ஒவ்வொரு உயிரினமும் என்னை அழ வைக்கிறது. உடையில் உணவில் அருந்தும் பானத்தில் மொழியில் பல்லினத்துவத்தை நிராகரித்து ஒற்றைப் பண்பாட்டை வலியுறுத்தும் உலகமயமாக்கலின் போக்கு என்னைக் கோபப் படுத்துகிறது. பெரும்பான்மையின் பெயரால் எனது நிலத்தின் இயற்கைச் சூழல் அபகரிக்கப்படும் போது, சீரழியும் போது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவற்றின் தெறிவினையாகவே சுற்றுச் சூழல் இயக்கங்களில் என்னை இணைத்துக் கொண்டதோடு சுற்றுச் சூழல் குறித்துப் பேசவும் எழுதவும் ஆரம்பித்தேன்.

*யாழ்குடாநாட்டின் நீர்வளத்தின் எதிர்காலம் குறித்து அதிகமாக எச்சரித்து வருகிறீர்கள். அதுபற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்ல முடியுமா?*

யாழ்ப்பாணத்தவர்களுக்கு அவர்களின் கிணறுகள் பற்றிப் பெருமைகள அதிகம். வற்றவே வற்றாது என்பார்கள். தேன் சுவை என்பார்கள். ஆனால் அந்தப் பெருமைகளில் இடி விழுந்ததைப் போல வற்றவே வற்றாது என்றிருந்த அனேகமான கிணறுகளில் நீர்மட்டம் கீழிறங்க ஆரம்பித்துள்ளது. தேன் சுவை போய் பல கிணறுகளில் தண்ணீர் உப்புக் கரிக்கத் தொடங்கிவிட்டது. இவற்றிற்கும் மேலாக கண்ணுக்குப் புலப்படாத புற்று நோய் இரசா யனங்களும் மலக்கிருமிகளும் கூட நீரைப் பாழ்படுத்தி வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2003இல் நடைபெற்ற சர்வதேசக் கரத்தரங்கின் போது சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள கிணற்று நீரில் நைத்திரேற்று, பொஸ்பேற்று, குளோறேற்றுப் போன்ற இரசாயனங்களும் இ.கோலி, கோலி ஃபோர்ம்கள் போன்ற மலக் கிருமிகளும் ஆபத்தான அளவிற்குப் பெருகியிருப்பது தெரியவந்துள்ளது.

*இந்த அவலங்களுக்கான காரணங்களாக நீங்கள் எவற்றைச் சொல்ல விரும்புகிறீர்கள்?*

நாமே தான் எம்மை அறியாமலே இத்தனை சீர்கேடுகளுக்கும் காரணமாக இருக்கிறோம். யாழ்ப்பாணக் குடாநாடு இன்று தாங்குகின்ற சனத்தொகை அதிகம். இப்போதும் சுமார் ஐந் தரை இலட்சம் மக்கள் குடியிருக்கின்றார்கள். இவர்களுக்காக 62000 கிணறுகளும் 5000 குழாய்க்கிணறுகளும் அனுதினமும் தண்ணீரை இறைத்துக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு வெளியேற்றப்படும் நீரை ஈடுகட்டுவதற்குப் போதிய மழைவீழ்ச்சி இல்லை. நீர்ச் சமன்பாட்டில் ஏற்பட்டு வரும் இந்தக் குழப்பம் காரணமாகவே கடல் நீர் நன்னீருடன் கலக்க ஆரம்பித்துள்ளது.

*குடாநாட்டின் குடிநீரில் மலக்கிருமிகளும் கலந்திருப்பதாகச் சொன்னீர்கள். இது எவ்வாறு நேர்ந்தது?*

யாழ் மாவட்டத்தில் 45 விழுக்காடு மக்க ளுக்கு அடிப்படை மலசல கூட வசதிகள் இல்லையென்பது பலராலும் நம்ப முடியாத உண்மை. இவர்கள் ஒவ்வொரு நாளும் சுமார் 45000 கிலோ மலத்தை வெளிகளில் தான் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மலசல கூடங்களும் பலரும் நினைப்பதைப் போலப் பாதுகாப்பானவை அல்ல. கழிவுக் குழிக்கும் கிணற்றுக்கும் இடையே ஆகக் குறைந்தது 15 மீற்றர்கள் இடைவெளியாவது இருக்க வேண்டும். ஆனால் குடாநாட்டின் சனப்பெருக்கம் அதற்கு இடம் தருவதாக இல்லை. சுண்ணாம்புக் கற்களில் இருக்கும் நுண்ணிய துளைகளினூடாக கழிவு நீர் கிணற்று நீருடன் தாராளமாகக் கலந்து வருகிறது.

*மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வ்ந்த போரையும் இந்தச் சீர்கேட்டிற்கான காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடலாமா?*

குடாநாட்டின் நீர்வளம் ஏற்கனவே எதிர் கொண்டு வந்த பிரச்சினைகளை போர் மேலும் ஆழப் படுத்தியிருக்கின்றது என்று சொல்லலாம்.

குடாநாட்டின் பெரும் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தால் ஆக்கிர மிக்கப்பட்டு இப்பிரதேசங்களில் இருந்தவர்கள் வலுக் கட்டாயமாக விரட்டப்பட்டுள்ளனர். இடம் பெயரும் அகதி வாழ்க்கை சுற்றுச் சூழலுக்கு எல்லாவிதத்திலும் கேடானது தானே. குறுக் கப்பட்ட பிரதேசத்தில் மக்கள் அடைந்து வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பதால் அப்பகுதிகளில் கிணறுகள் இடைவிடாது சுரண்டப்பட்டுத் தண்ணீர் மேலும் மேலும் எட்டாத ஒன்றாகவே ஆகி வருகிறது.

*1965இல் இஸ்ரேலில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு வந்திருந்த ஏறட் எனும் நீரியல் நிபுணர் யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் பாலைவனமாகும் என்று குறிப்பிட்டிருந்தார். அவரது கருத்துடன் உடன்படுகிறீர்களா?*

கலாநிதி ஏறட் யாழ்ப்பாணத்தின் கடல் நீர் ஏரிகளையும் அளவுக்கதிகமாக இறைக்கப்பட் டுக் கொண்டிருந்த கிணறுகளையும் அவதானி த்த பின்னர் தான் இந்த முடிவுக்கு வந்தார்.

தண்ணீர் பற்றாக்குறையான பிரதேசம் அது வும் இயற்கையாகவே வறண்ட நிலையில் உள்ள ஒரு பகுதி சரியான நீர் முகாமைத் துவம் இல்லையானால் இறுதியிலே பாலையாவ திலேயே முடியும். ஆனாலும் நாம் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை. பாலைவன நாடான இஸ்ரேல் நீர் முகாமைத்துவத்தில் உலகுக்கே இன்று வழிகாட்டியாக இருக்கிறது. விவசாய உற்பத்திகளை இருக்கின்ற நீர் வளத்தைக் கொண்டே ஆறுமடங்காக உயர்த்திச் சாதனை செய்திருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும் வற்றி உப்பேறி நஞ்சுகளும் கிருமிகளும் குடிகொண்டிருக்கும் குடிநீரை அதற்குக் காரணமான மக்களின் மூலமே மீட்டெடுக்கவும் முடியும்.

*இந்த நீரியல் பேரவலத்தில் இருந்து எவ்வாறு மீளமுடியும் என்று கருதுகின்றீர்கள்*

குளங்களையும் அதற்கான வரத்துக் கால்வாய்களையும் பழுது பார்க்கின்ற பணிகள் கூட்டுப் பொறுப்புடன் செய்யப்பட வேண்டும். மழைநீரைத் தேங்க விடாது தெருவுக்குத் திருப்பிவிடும் போக்கைக் கைவிட்டு அதனை வரம்புகள் குழிகள் அமைத்துத் தேங்கி நிற்க அனுமதிக்க வேண்டும்.

மழைநீரை உப்பாற்றிலும் தொண்டைமானாற் றிலும் வழிமறிக்கும் வகையில் கைவிடப் பட்டிருக்கும் கடல்நீரேரித் திட்டங்களைப் புன ரமைப்பதிலும் அக்கறை கொள்வது அவசியம்.

பாரம்பரிய மலக்குழிகளைக் கைவிட்டு குழாய்களின் மூலம் கழிவுகளைத் தொலை தூரத்திற்கு எடுத்துச் சென்று அகற்றுகின்ற பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற ஒரு மாற்றுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

*போர் வேறு எந்த வகையில் ஈழத்தின் சுற்றுச் சூழலைப் பாதித்திருக்கிறது என்று கருதுகிறீர்கள்?*

வியட்நாம் போரின் போது அமெரிக்கா காடுகளின் மீது ஏஜன்ட் ஒறேன்ஜ்ச் (Agent orange) என்னும் நச்சுக் களைகொல்லியை விசிறியது. அந்த நஞ்சால் போர் முடிந்து இத்தனை வருடங்கள் கழிந்த பிறகும் கூட அங்கு பிறக்கும் குழந்தைகளை் அங்கக் குறை பாடுகளுடன் பிறக்கின்றன.

இப்படிப் போர் நடைபெற்ற எல்லா நாடுகளிலுமே அந் நாடுகளின் சுற்றுச் சூழல் சுலபத்தில் வழமைக்குத் திரும்ப முடியாதவாறு சீரழிக்கப்பட்டிருக்கிறது. இதில் இலங்கை மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா?

பதுங்கு குழிகளையும் காப்பரண்களையும் அமைப்பதற்காகத் தறித்து விழுத்தப்பட்ட பனைமரங்கள் மில்லியனைத் தாண்டும். வன்னியில் இராணுவ நடவடிக்கைகளின் போது பல நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் மொட்டையடிக்கப்பட்டுள்ளன. இதில் ஈழத் தின் உயிர்ப் பல்வகைமையும் சேர்ந்தே சிதையுண்டிருக்கும்.

ஒலிச் சூழல் மாசுபாடு கருதி வாகனங்கள் அதிக ஒலி எழுப்புவதைத் தடுப்பதற்குச் சட்ட ங்கள் உண்டு.

ஆனால் வடக்குக் கிழக்கில் வீசப்பட்ட பல் லாயிரக் கணக்கான குண்டுகளின் வெடிப்புச் சத்தங்கள் குறித்தும் குண்டு விமானங் களின் மிகையொலி குறித்தும் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சத்தங்கள் காதினுள்ளே பாய்கின்ற நஞ்சுகள். உடல் நலத்துக்கும் மனநலத்துக்கும் பேரூறு செய்யும் மாசுக்கள்.

இங்கு நான் குறிப்பிட்டவை சில உதாரணங் கள் தான். முறையான ஆய்வுகளை மேற்கொண் டால் தான் போரின் சூழல் பாதிப்புகள் புற்றிய முழுப் பரிமாணங்களும் தெரிய வரும்.

